அங்காடிகள் மூடியிருந்தால் ஊழியர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும், கண்காணிப்பு அலுவலர்களுக்கு மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதனையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ் அவர்கள்.*

DR. (TMT.) NANCY ANN CYNTHIA FRANCIS: Hon'ble Speaker Sir and beloved Amma, the answer to my question has already been put into force. I express my thanks to the Hon'ble Speaker, to my beloved Amma and the Honourable Minister for Food for the extension of working time in Fair Price Shops which is of great help especially to the working women and teachers in particular. *நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 351, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

351—

கூடுதல் பேருந்து

*__41080__—**திரு. சு. மாதேஸ்வரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, பெரியகல்வராயன் மற்றும் சின்னகல்வராயன் மலைப் பகுதிகளிலுள்ள கிராமங்களுக்குக் கூடுதலாகப் பேருந்துகள் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் தொகுதி, பெரியகல்வராயன் மற்றும் சின்னகல்வராயன் மலைப் பகுதிகளிலுள்ள கிராமங்களுக்கு அரசுப்

2014 ஆகஸ்ட் 6]

போக்குவரத்துக் கழகம், சேலம் கோட்டம் சார்பாக ஆத்தூரிலிருந்து நான்கு பேருந்துகள்மூலம் 20 நடைகளும், வாழப்பாடியிலிருந்து 7 பேருந்துகள்மூலம் 34 நடைகளும், இராசிபுரத்திலிருந்து ஒரு பேருந்துமூலம் இரண்டு நடைகளும் மற்றும் விழுப்புரம் அரசுப் போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் கோட்டம் சார்பாக கள்ளக்குறிச்சியிலிருந்து 9 பேருந்துகள்மூலம் 54 நடைகளும், ஆக மொத்தம் 21 அரசுப் பேருந்துகள்மூலம் 110 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதுவே இந்தப் பகுதி மக்களின் போக்குவரத்துத் தேவைக்குப் போதுமானதாக உள்ளதென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.

திரு. சு. மாதேஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன். ஆத்தூர் தொகுதி, பெரியகல்வராயன் மற்றும் சின்னகல்வராயன் மலைப் பகுதிகளில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 2001-2006 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தில்தான் ஆத்தூரிலிருந்து குன்னூர் வரை பேருந்து இயக்கப்பட்டது. அதன்பின் வந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியாளர்கள் அந்தப் பேருந்தை முடவன்கோவில் வரை நிறுத்திவிட்டார்கள். ஆகவே, கருணைகூர்ந்து மீண்டும் பரிசீலனைசெய்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலமான 2001-2006-ல் இயக்கப்பட்டதைப்போல், அந்தப் பேருந்தை இயக்குவதற்கும் ஆத்தூர் முதல் திருப்பதி வரை ஒரு சொகுசுப் பேருந்தை இயக்குவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதையும் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவினைப் பெற்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.

திரு. கு. லிங்கமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதி, பேர்ணாம்பட்டு போக்குவரத்துப் பணிமனை வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. சொந்தக் கட்டடத்தில் செயல்படுவதற்காக, இடம் தேர்வுசெய்யப்பட்டு, நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பணிமனையைக் கட்டுவதற்கு பத்து இலட்சம் ரூபாயை 2013-2014 ஆம் ஆண்டிலேயே அளித்திருக்கின்றேன். ஆனால், இன்னும் அந்தப் பணி தொடங்கப்படவில்லை. தொடங்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன? எப்போது அந்தப் பணி தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமருகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்குத் திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளன. ஒப்பந்தப்புள்ளிகள் கோருகின்ற பணிகள் நிறைவு பெற்றவுடன், கட்டடம் கட்டுவதற்கான பணிகள் விரைவாகத் தொடங்கப்பட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் பணிமனை தொடங்கி வைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.

திருமதி த. இந்திராகாந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் காவல் தெய்வம், தமிழகத்தின் ஒப்பற்ற முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். எனது துறையூர் தொகுதியிலிருந்து துறையூர் டாப்செங்காட்டுப்பட்டி, தோனூர், மணலோடை வழியாகத் தண்ணீர்பள்ளம் டாப்செங்காட்டுப்பட்டி

2014 ஆகஸ்ட் 6]

வழியாகக் கூடுதல் பேருந்து வசதியை ஏற்படுத்திக் கொடுக்குமாறு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்ட மக்களுடைய நலன் கருதி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த 3 ஆண்டுகளில் 110 புதிய வழித்தடங்களை மக்களுடைய பயன்பாட்டிற்காக வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற வழித்தடங்கள் ஆய்வு செய்யப்பட்டு, பயணிகளுடைய எண்ணிக்கைக்கேற்ப, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 352, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. முத்துக்குமார், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

352—

விரிவாக்கம்

*__30210—திரு. வி. முத்துக்குமார்:__

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலம் டான்காஃப் நிறுவன வளாகத்திலுள்ள நெல் சுத்திகரிப்பு நிலையத்தை விரிவாக்கம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,